**கடுகன்னாவ நகர சபை**
**கண்டி மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 31 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 20 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கடுகன்னாவ நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் சிங்ஹ கலகத்தால் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 7,000,000 பெறுமதயான 08 விடுதிகள் அன்பளிப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீட செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2020 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (ii) | சபைக்கு சொந்தமான கடுகன்னாவ சந்தை மற்றும் 07 அரச விடுதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீட செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2020 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (iii) | கடன்கொடுத்தோர் ரூபா 858,000 இனால் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீட செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | சபைக்கு சொந்தமான சொத்துக்களை இனங்கண்டு 2020 ஆண்டின் போது கணக்கீட செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (iv) | மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கைகளின் படி அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டும். | ஆண்டிற்காக கிடைத்த பட்டியலின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

(ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| செலுத்த வேண்டிய 06 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 16,297,777 ஆனதுடன், அவற்றில் ஆண்டு 1 – 3 இற்கு இடையிலான காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 4,955,038 மற்றும் 03 ஆண்டுகளிற்கு அதிக காலத்தை விஞ்சிய மீதிகள் ரூபா 624,450 ஆனது. | செலுத்த வேண்டிய மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | சில மீதிகள் செலுத்தப்பட்டுள்ளன. சபையின் நிதி நிலமையை கருத்திற் கொண்டு பகுதி பகுதியாக செலுத்துவதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைதுவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு** | | **இணங்காமை** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பரிமாணம் 571(3) | ரூபா 928,546 பெறுமதியான காலாவதியான 59 வைப்புக்கள் வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பரிமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2016 – 2017 இற்குரிய மீதி ரூபா 468,603 ஆனதுடன், வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2010 நவம்பர் 24 திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் 5/2010 இலக்க சுற்றறிக்கை | ஒருங்கினைப்பு உத்தியோகத்தராக கலவித் தகைமை பூர்த்தியற்ற விண்ணப்பதாரர் ஒருவர் சேர்க்கப்பட்டு ரூபா 49,500 ஆன சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | நியமனம் வழங்குதல் சுற்றறிக்கை ஆலோசனைப்படி செய்ய வேண்டும். | கல்வித் தகைமையை உருதி செய்து கொண்டு நியமனம் வழங்கப்பட்டதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 458,299 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,175,888 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமனம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 7,655,000 | 7,700,593 | 4,517,460 | 4,957,474 | 7,650,000 | 7,655,135 | 8,171,375 | 5,357,337 |
| (ii) | வாடகை | 3,611,500 | 3,586,600 | 3,127,941 | 821,954 | 3,032,300 | 2,114,985 | 1,952,635 | 674,918 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,535,000 | 1,540,976 | 1,532,476 | 36,000 | 1,300,000 | 1,314,386 | 1,314,386 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 7,450,000 | 3,556,111 | 370,511 | 5,666,022 | 2,585,000 | 2,798,655 | 2,232,409 | 1,015,961 |
| | | 20,251,500 | 16,384,280 | 9,548,388 | 11,481,450 | 14,567,300 | 13,883,161 | 13,670,805 | 7,048,216 |

#### 2.2.2 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 749,127 ஆன நிலுவை கடையறை வாடகை நிலவியதுடன் அவற்றில் 17 கடைகளிலிருந்து நீண்ட காலமாக நிலவி வரம் நிலவை மீதி ரூபா 290,469 மற்றும் பழைய வியாபார கட்டிடத் தொகுதியிலிருந்த 04 கடையறைகளின் 2007 மற்றும் 2013 ஆண்டுகள் முதல் நிலவும் ரூபா 151,369 வுமான நிலுவை மீதியுமானது. | நிலுவை கடை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | முத்திரையிட நடவடிக்கை எடுத்த போதும் திடீரென ஏற்பட்ட COVID 19 தொற்று காரணமாக அதனை செய்து கொள்ள முடியவில்லை என அறிவிக்கிறேன். |

#### 2.2.3 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 161,832 தொகை மற்றும் ரூபா 904,200 தொகையுமானது. | குறித்த பணத்தை சபைக்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண சபையிடம் கோரியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை கட்டளை சட்டத்தின் 157 பிரிவின் கீழ் 15 பிரதான விடயங்களை செய்வதற்காக உப விதிகள் விதிக்கபட வேண்டிய போதும் 14 விடயங்களிற்கு மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | உப விதிகளை விதித்து வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**(ஆ) திண்பக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபையில் கழிவகற்ற உரிய இடமொன்றை இனங்கண்டிருக்காததால் எதிர்காலத்தில் கழிவுகளை அகற்றுவது சபைக்கு பிரச்சினைக்குரிய விடயமாகும் என அவதானிக்கப்பட்டது. | முறையாக கழிவுகளை முகாமை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி ஆணையாளரிற்கு சொந்தமான காணியொன்று இனங்காணப்பட்டு சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகளை போதியளவு இனங்கண்டுடில்லாததுடன், அது தொடர்பாக போதிய கடமைப்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை திட்டமிட்டு கருத்திட்டங்களை இனங்கண்டு பல கட்டங்களாக நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான சிறப்பங்காடி தொகுதியில் ஒரு கடையறை 2011 ஆண்டு முதல் மூடப்பட்டிருப்பதால் ரூபா 1,362,000 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | வருமானம் ஈட்டிக்கொள்ள பொருத்தமான முறைமையொன்றை கடைபிக்க வேண்டும் | கடையறையின் அமைவிட தன்மை காரணமாக இக் கடையறையை பெற்றுக் கொள்ள எவரும் முன்வரவில்லை. |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 37 காணித் துண்டுகள் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளாது சபை தீர்மானத்தின் மீது ஆண்டு குத்தகையிற்கு வழங்கப்பட்டிருந்தது. | காணிகளை மதிப்பிட்டு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமான பரிசோதகர்களின் மதிப்பீட்டின் மீதி ஆண்டு தோறும் குத்தகைக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 07 பதவிகளில் 12 வெற்றிடங்கள் நிலவின. | வெற்றிட பதவிகளை நிரப்ப நடவடிக்கை எடுக்க வெண்டும். | தற்போதைய அரச சட்டம் பிரகாரம் ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது. சட்டம் அகற்றப்பட்டவுடன் ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஆண்டு வீத வரி மதிப்பீடு பிரகாரம் 2019 ஆண்டு வரை வீத வரி அறவிடப்பட்டுள்ளது. | வரி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு எழுத்து மூலம் அறிவித்து மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆண்டு கோரிய போதும் மதிப்பீட்டு திணைக்களத்தால் இச் செயற்பாடு நிரைவேற்றப்படவில்லை என அறிவிக்கிறேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கடுகன்னாவ பொது மலசலகூட கட்டிடத்தொகுதி பழுதுபார்பிற்காக ரூபா 1,020,000 செலவிடப்பட்ட போதும், சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காணியை சுவீகரித்துக் கொண்டு நிர்மாணம் மேற்கொள்ளப்பட வேண்டும். | சபைக்கு சொந்தமான ஆதனமொன்றல்லாததுடன், அதனை பராமரிப்பதை மாத்திரம் சபை மேற்கொள்கிறது. |

#### 3.5.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| புதிய வியாபார கட்டிடத் தொகுதியை நவீனமயமாக்கி குத்தகைதாரரிகளுக்கும் நுகர்வோர்களுக்கும் வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நுகர்வோரை கவரக்கூடிய வகையில் வியாபார கட்டிடத் தொகுதியை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பராமரிப்பு பயனற்றது என்பதால் புதிய திட்டத்திற்கு நிர்மாணிக்க வேண்டுமென மகா சபை தீர்மானித்துள்ளது. |

#### 3.5.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 7,967,144 கிரயமான வைப்பிரேட்டிங் ரோலர் மற்றும் ரூபா 1,400,000 பெறுமதியான மொடார் வண்டி பயன்படுத்தப்படாது நிருத்தி வைக்கப்பட்டிருந்தன. | சொத்துக்களை உச்ச நிலையில் பயன்படுத்த வேண்டும். | இச் சொத்து குறைபயன்பாட்டு சொத்தென மாகாண சபைக்கு மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கும் அறிவித்துள்ளதாக அறிவித்துள்ளதுடன், சபைக்கு வாகனங்கள் இல்லாததால் 302 – 1522 கார் வண்டியை பழுதுபார்த்து பயன்படுத்துவதாக அறிவிக்கிறேன். |

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| டென்டர் வழங்கப்படாத ஆட்டிறைச்சி மற்றும் மாட்டிறைச்சி கடைகளிற்கும் பெறுகைகள் அறிவித்தல் பிரசுறிக்கப்படுவதன் காரணமாக அப்பிரசுரத்தை சரிசெய்ய மீண்டும் பெறுகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு, அதற்காக ரூபா 30,590 செலவிடப்பட்டிருந்தது | டென்டர் வழங்கப்படும் ஆதனங்களிற்கு மாத்திரம் அறிவித்தல் பிரசுறிக்க வேண்டும். | பிரபல பத்திரிகைகளில் கடையறைகளை குத்தகைக்கு வழங்க அறிவித்தல் பிரசுறிக்கப்பட்டதுடன், பிரதேசவாசிகளின் மற்றும் மதகுருமார்களின் பாரிய எதிர்ப்பு காரணமாக அறிவித்தல் திருத்தப்பட்டது. |